சுருக்கம்

பணியமைப்பு-பொதுப்பணித்துறை-தமிழ்நாடு அமைச்சுப் பணி- கருணை அடிப்படையில் பணி நியமனம்- திரு ப.சதீஸ்குமார், த/பெ.காலஞ்சென்ற திரு வே.பஞ்சரத்தினம்- கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது- பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித்(பி1) துறை

அரசாணை (3ப) எண்.24 நாள்: 31.08.2021

திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ, ஆவணி 15.

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை, மதுரை மண்டலம், மதுரை கடிதம் செ.மு.ஆ.எண். பி1/3493/2020, நாள் 07.09.2020.

----

ஆணை:-

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித் துறையைச் சார்ந்த பெரியாறு வைகை வடிநிலக் கோட்டம், மதுரை அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு வே.பஞ்சரத்தினம் கடந்த 11.11.2013 அன்று காலமானதைத் தொடர்ந்து அவரது மகன் திரு ப.சதீஸ்குமார் என்பவருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது). பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், மதுரை அலுவலகத்தில் 09.03.2020 முற்பகல் முதல் பணி மேற்கொண்டு வருகிறார் என்று தெரிவித்து, தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்குத் தேவையான அனைத்து அசல் சான்றிதழ்கள்/ சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 09.03.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, மதுரை மண்டலம், மதுரை அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றவர்களின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசு

பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

4. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை, மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் திரு ப.சதீஸ்குமார் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித்துறையில் கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 09.03.2020 முற்பகல் முதல் அப்பதவிக்குரிய உடற்தகுதிப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.எண்.7960/ட்டி.1/2021-1, நாள் 28.04.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அ.சா.எண். 14035/ஜி.1/2021-1, நாள் 11.05.2021-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை, மதுரை மண்டலம், மதுரை-2.
திரு ப.சதீஸ்குமார், இளநிலை உதவியாளர். (தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை, மதுரை மண்டலம், மதுரை-2 வழியாக)

நகல்

முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை-5.
மாநில கணக்காயர், சென்னை-18.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/ உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

6/9/21

பிரிவு அலுவலர்

6.9.21